(ஆ) பொதுக் கணக்குக் குழு உறுப்பினர்கள் தேர்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொதுக் கணக்குக் குழு. பொதுக் கணக்குக் குழுவிற்கு 16 உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடு) அதையெல்லாம் ஒன்றும் செய்ய முடியாது, உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 203–ன்கீழ், 2015–2016 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி, பதினாறு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் குறிப்பிடும் நாளன்று இப்பேரவை தேர்ந்தெடுக்கும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

(இ) பொது நிறுவனங்கள் குழு உறுப்பினர்கள் தேர்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொது நிறுவனங்கள் குழு. பொது நிறுவனங்கள் குழுவிற்கு 16 உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் பேசுவது எதுவும் என் காதில் விழாது, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் பேசுவது எதுவும் அவைக் குறிப்பிலும் ஏறாது, என் காதிலும் ஏறாது, உட்காருங்கள். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

2015 செப்டம்பர் 21]

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 211-ன்கீழ், 2015-2016 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி, பதினாறு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப்பேரவை தேர்ந்தெடுக்கும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: Zero hour-ல் எடுத்துக்கொள்ளலாம் என்று நான் சொல்லவேயில்லை. (குறுக்கீடுகள்) Zero hour-ல் பேசலாம் என்றுதான் சொன்னேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

(இந்திய கம்யூனிஸ்டு கட்சி (மார்க்சிஸ்ட்) உறுப்பினர்கள் மாண்புமிகு பேரவைத் தலைவர் இருக்கையை நோக்கி வந்தனர்.)

3. தகவல் கோரல்-தொடர்ச்சி

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்-தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. க. பாலகிருஷ்ணன், அதற்கெல்லாம் நான் பதில் சொல்லிவிட்டேன். (குறுக்கீடுகள்) அதற்கெல்லாம் நான் பதில் சொல்லிவிட்டேன்; நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அதற்கெல்லாம் உரிய பதிலைச் சொல்லிவிட்டேன்; உங்கள் இருக்கைக்குப் போய் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உங்கள் இடத்திற்குப் போய் உட்காருங்கள்.